**செய்தி வெளியீடு எண்.707** **12.10.2009**

**மக்கள் நல்வாழ்வுத் துறை**

# செய்தி வெளியீடு

தமிழகத்தில் A H1N1 எனப்படும் இன்புளுயன்சா நோய் பரவுதல் வெகுவாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், நோயினால் பாதிக்கப்படுபவர்களிடம் இந்நோய் இருப்பதை உறுதி செய்வதிலும், சிகிச்சையளித்தலிலும் காலதாமதம் ஏற்படுவதால் சில உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. உயிரிழப்பு உடனடியாக தடுக்கப்பட வேண்டும் என்பதற்காக அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளின் மருத்துவ அலுவலர்கள் கீழ்க்காணும் விதிமுறைகளை தவறாமல் கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்:-

- A H1N1 இன்புளுயன்சா நோயாளிகள் பற்றிய தகவல்கள் தெரிந்தவுடன் பொது சுகாதார சட்டப்பிரிவு 66–ன்படி பொது சுகாதாரத் துறை இயக்குநர், டி.எம்.எஸ். வளாகம், சென்னை–6 அவர்களுக்கு அறிவிப்பு செய்திட வேண்டும்.

- A H1N1 இன்புளுயன்சா நோயாளிகள் கீழ்க்கண்டவாறு மூன்று வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

- இந்த மூன்று வகை நோய்களுக்கு ஏற்றவாறு சிகிச்சை அளிப்பது அரசு மற்றும் தனியார் மருத்துவமனை மருத்துவர்களின் பொறுப்பும் கடமையும் ஆகும்.

| வகை | அறிகுறிகள் | செய்ய வேண்டியவை |
|---|---|---|
| வகை A | லேசான காய்ச்சல், இருமல், தொண்டைப்புண், வயிற்றுப் போக்கு, வாந்தி | • மற்றவர்களோடு ஒன்றாமல் வீட்டில் இருக்க வேண்டும். |
| வகை B | கடுமையான காய்ச்சல், அதிகமான தொண்டைப்புண் மற்றும் இந்நோய் பாதிப்பிற்கு அதிகப்படியான வாய்ப்பு உள்ளவர்கள் (கர்ப்பிணிகள், 5 வயதிற்குட்பட்ட சிறுவர்கள், 65 வயதிற்கு மேற்பட்டோர், நுரையீரல் இதய, சிறுநீரக, கல்லீரல் நோயாளிகள், சர்க்கரை நோயாளிகள், இரத்தக் கொதிப்பு உள்ளவர்கள், புற்று நோய் மற்றும் எய்ட்ஸ் நோயாளிகள்) | • மற்றவர்களோடு ஒன்றாமல் வீட்டில் இருக்க வேண்டும்.<br>• உடனடியாக அரசு மருத்துவமனைக்குச் சென்று மருத்துவரின் ஆலோசனையை பெறவேண்டும்.<br>• முன்னெச்சரிக்கையாக டாமிபுளு மாத்திரைகளை மருத்துவரின் ஆலோசனையின்படி உட்கொள்ள வேண்டும். |
| வகை C | மேலே குறிப்பிடப்பட்டுள்ள வகை A & B அறிகுறிகளுடன், மூச்சு விடுதலில் சிரமம், குறைந்த இரத்த அழுத்தம், மயக்கநிலை, நெஞ்சுவலி, நகங்கள் நீல நிறமாக மாறுதல் | • உடனடியாக அருகிலுள்ள அரசு மருத்துவமனையில் தனிமைப்படுத்தப்பட்ட வார்டுகளில் உள் நோயாளியாக சேருதல் வேண்டும்.<br>• A H1N1 உள்ளதா என பரிசோதித்துக் கொள்ளவேண்டும்.<br>• நோய் பாதிப்பு உள்ளவர்கள் மருத்துவரின் ஆலோசனையின்படி டாமிபுளு மாத்திரைகளை உட்கொள்ள வேண்டும். |

அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில், தொண்டை சளி மாதிரிகள் எடுக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பரிசோதனைக்கு இங்கு எடுக்கப்படும் மாதிரிகள் பரிசோதனைக்கு கிண்டியில் உள்ள கிங் ஆய்வு நிலையத்திற்கு அனுப்பப்படும். கிங் ஆய்வு நிலையத்தில் தொண்டை சளி மாதிரிகள் எடுக்கப்பட மாட்டாது. அரசு அங்கீகரித்துள்ள ஒன்பது தனியார் ஆய்வகங்களிலும் மாதிரிகள் எடுத்து பரிசோதனை செய்து முடிவுகள் பெறலாம்.

டாமிபுளு மருந்து கொடுப்பதில் தாமதம் ஏற்படுவதால் இறப்புகள் ஏற்படலாம். எனவே தாமதமின்றி B வகை மற்றும் C வகையினருக்கு உடனடியாக சிகிச்சை அளிக்க வேண்டும். நோயாளிகளை தனிமைப்படுத்தாவிட்டால் மற்றவர்களுக்கு இந்த நோய் பரவும் வாய்ப்பு உள்ளது.

தனிப்பட்ட நோயாளிகள், வீடுகளில் தனிமை படுத்தி சிகிச்சை அளிக்க அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் வீடுகளில் முறையாக தனிப்படுத்தாததால் அருகில் உள்ளவர்களுக்கு இந்நோய் பரவிவருகிறது. எனவே வீடுகளில் தனிமைப்படுத்தி சிகிச்சை பெறுவது தடைசெய்யப்படுகிறது.

மேற்கண்ட விதிமுறைகளை கடைப்பிடிக்காவிட்டால் பொது சுகாதார சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

*********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9